# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 64 | 23.05.2023 (செவ்வாய்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00




▶ பக்கம் 5

## புதிதாய் முளைக்கும் மற்றுமொரு பௌத்த விகாரை இராணுவத்தினர் தீவிரம்..!

மன்னார் - உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப் பிரிவில், புதிதாக பௌத்த விகாரையை அமைப்பதற்கான வேலை திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமையை வன்மையாக கண்டிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார். மன்னார் - உயிலங்குளம் பிரதேசத்தில் புதிதாக இராணுவத்தினரால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று (22.05.2023) குறித்த பகுதிக்கு விஜயம்

## இனப்படுகொலை சூத்திரதாரிகளே இன்று நாட்டை ஆள்பவர்கள்...!

– அருட்தந்தை சக்திவேல் –



▶ பக்கம் 5

சிவில் சமூக அமைப்புக்கள் கடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை காலி முகத்திடலில் அனுஷ்டித்தார்கள். இந்த முறை பொரளையில் நினைவேந்தலை அனுஷ்டிதார்கள். இதற்கு ஒரு காரணம் உண்டு என அருட்தந்தை சக்திவேல் தெரிவித்துள்ளார்.

## ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை! ஏற்க மறுத்த தமிழ் தரப்புகள்!

– சட்டத்தரணி சுகாஷ் காட்டம் –

அரச எடுபிடிகளான தமிழ் அரசியல் தலைமைகள் சிலர், நடிப்பதையும் ஈழத்தில் நடந்தது இனப்படு கொலை என்று வாயளவில் கூறி ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளகப் பொறிமுறைக்கு உடன்படுவதையும் தமிழ் மக்கள் இனியும் கண்டுபிடிக்கமாட்டார்களென்று அரச எடுபிடி தமிழ் தலைமைகள்



▶ பக்கம் 5

## பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியுமா?



### கனேடியப் பிரதமரின் அறிக்கை சரியானது!

உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ள விடயத்தை கண்டிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இலங்கையில் இடம்பெற்றது இனப்படு கொலை தான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

▶ பக்கம் 5

## பச்சிலைப்பள்ளியும் மருதங்கேணியும் பாவப்பட்ட பிரதேசம்

– சின்னையா சிவரூபனை மீண்டும் நியமிக்குமாறு கோரிக்கை! –

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சுமார் 2 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள வைத்தியர் சின்னையா சிவரூபனை மீண்டும் கிளிநொச்சி பளை வைத்தியசாலை பொறுப்பதிகாரியாக நியமிக்குமாறு சமூகசெயற்பாட்டளரான முரளிதரன் வலியுறுத்தியுள்ளார்.



▶ பக்கம் 5

## இலங்கையில் நடந்தது இனப்படுகொலை அல்ல! மகிந்த ராஜபக்ச விளக்கம்



போரில் துரதிஷ்டவசமாக பொதுமக்கள் சாவடைந்தனர், அதற்காக இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என இறுதிப்போரின் போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். மே 18ஆம் திகதி, தமிழ் இனப்படு கொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை கனேடிய

▶ பக்கம் 5




▶ பக்கம் 5

## கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்: அச்சுறுத்திய அராஜகக் கும்பல்

### கைது செய்யுமாறு கோரிக்கை விடுத்த ராஜித!!

## தமிழர்களின் காணியை பறித்து கட்டிய விகாரையை அகற்று : இன்றும் போராட்டம் தொடரும்!

தையிட்டியில் தமிழர்களின் காணிகளை பலவந்தமாக பறித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்ற வலியுறுத்தி நேற்றும் (22) தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பேச்சாளர் க.சுகாஸ் உள்ளிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் இன்று அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். விகாரையை எதிர்வரும் 26ஆம் திகதி திறந்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்திற்கு தடைகோரி பலாலி பொலிசார், மல்லாகம் நீதிமன்றத்தை நாடியியிருந்தனர். இதன்படி, விகாரையின் வழிபாட்டிற்கோ, வீதிப் போக்குவரத்துக்கோ



▶ பக்கம் 5

## பதவியேற்றவுடன் திட்டங்களை அறிவித்தார் வடக்கு ஆளுநர்

பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்கு தீர்வு பெற்றுத் தர முயல்வேன் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

தனது அலுவலகத்தில் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை ஆரம்பித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது மேலும்



▶ பக்கம் 5




# வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷன்': துயர் படிந்த மண்ணின் வரலாற்றை பதிந்த "கல்லறை மேலான காற்று"!

**(வடமராட்சி! சோகங்களின் அதி உச்சங்களை சுமந்த மண்! வீரத்தின் வித்துக்களையும் பிரசவித்த மண்)**

1987 மே மாதம் 26 ஆம் நாளில் யாழ் குடா நாட்டில் "ஒப்பரேஷன் லிபரேஷன்" நடவடிக்கை இடம் பெற்றது. வடமராட்சியில் ஆரம்பமாகிய இந் நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் 1987 ஆம் ஆண்டு மே, ஜுன் மாதங்களில், அச்சமயம் போராளிகளன் கட்டுப்பாட்டிலிருந்து யாழ் குடாநாட்டில் அமைந்துள்ள வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்கில் வலிந்த தாக்குதலாகும்.

வடமராட்சி பிரதேசத்தில் 1987 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியில் நடைபெற்ற லிபரேசன் ஒப்பரேசன் வன்செயல் நடவடிக்கையின் போது பல நூறு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் மேற்கொண்ட முதல் மரபுப் போர் இதுவாகும். இந்நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கேர்னல் விஜய விமலரத்ன இலங்கை இராணுவத்தை வழிநடத்தியதோடு அப்போதைய இலங்கை சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

1987 மே 27 இல் விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்கும் இராணுவ நடவடிக்கை எனப்பொருள்படும் ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கை இலங்கை இராணுவத்தால் நடத்தப்பட்டது.

5 நாட்கள் நீடித்த இராணுவத்தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித் தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடிக்கும் இனவாத நடவடிக்கையாக அமைந்தது. இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பலாலியில் இருந்து வெளிவந்த இராணுவத்தினர் வசாவிளான், குரும்பசிட்டி போன்ற பகுதிகளில் முன்னேறினர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம்பெயர்ந்தனர். இதில் பெரும்பாலான தமிழர்களின் வீடுகள் எவ்வித காரணமும் இன்றி புல்டோசர்கள் மூலம் இடிக்கத்தழிக்கப்பட்டது.

மேலும் பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறிமுதல் செய்து பலாலி விமானநிலையமும் விஸ்தரிக்கப்பட்டது. இன்றும் இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத் திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளே இலங்கைத் தமிழர்கள் இந்தியாவின் தலையீடு வேண்டும் எனக் கோரக் காரணம் ஆயிற்று. இந்த இராணுவ நடவடிக்கை அடுத்தே 1987 இல் இந்திய அமைதி காக்கும் படை இலங்கை வந்தது. 1987 இற்கு முற்பட்டகாலப்பகுகியில் சிறிலங்கா இராணுவம் அவர்களின் முகாம்களுக்குள்ளேயே தமிழர் இயக்கங்களினால் முடக்கி வைக்கப்பட்டிருந்தனர். தொண்டமானாறு, வல்வெட்டித்துறை இராணுவ முகாம்களினூடாக முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர், வடராட்சிப் பிரதேசத்தையே ஆக்கிரமித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கை வடமராட்சியுடன் இடைநிறுத்தப்பட்ட போதும் இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் முழு யாழ்ப்பணத்திற்கும் ஆனதாகக் கருதப்படுகின்றது.

1987 மே இறுதியில் வடமராட்சியில் நடந்தேறிய "ஒப்பரேசன் லிபரேசன்" நினைவுகள் மிகக் கொடூரமானது. கோரமானது, துன்பங்களின் சுவடுகள் இன்னும் அங்கே பதிக்கப் பட்டவையாக உள்ளன. பிரித்தானியர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை அடைந்த பின்னர் இலங்கை இராணுவம் மேற்கொண்ட முதல் மரபு வழிப் போர் இதுவாகும். இந்நடவடிக்கைக்கு பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ, கர்னல் விஜய விமலரத்ன ஆகியோர் இலங்கை இராணுவத்தை வழி நடத்தியதோடு அப்போதைய இலங்கை சனாதிபதி ஜெ. ஆர். ஜயவர்தனா, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் அரசியல் தலைமைத்துவத்தையும் வழங்கியிருந்தனர்.

நாளைய சந்ததி இவ்வரலாறுகளை மறக்காமல் இருக்கவும், வரலாற்றின் துயர் படிந்த நாட்களை மீள நினைவு கொள்வதும் தமிழ் மக்களின் கடமையாகும். வடமராட்சியில் நடந்தேறிய "ஒப்பரேசன் லிபரேசன்" துயர் படிந்த நாட்களை வரலாற்றுத் தடங்களில் பதித்ததில் "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பு ஒரு சான்றாகும்.

காற்றுக் கூட அனலாக வீசிக்கொண்டிருந்த 1987 காலகட்டம். அவ்வேளையிலும் விடியலை நோக்கிய எழுச்சியில் சண்டமாருதமாய் எழுந்து நின்ற இளங் கவிஞர்களின் படைப்பே "கல்லறை மேலான காற்று" எனும் கவிதை தொகுப்பாகும். ஐந்து நாட்கள் நீடித்த இராணுவத் தரப்பில் இந்த நடவடிக்கை கொப்பேகடுவ வழிகாட்டலில் இந்த அப்பாவித்தமிழர்களை வீடுகளில் இருந்து விரட்டி அடித்த நடவடிக்கையாக அமைந்தது. இந்த நடவடிக்கை மூலம் பெருந்தொகை மக்கள் இடம் பெயர்ந்தனர்.

இருண்டு போன வடமராட்சி மண்ணின் வாழ்மியத்துக்கு ஒளியை ஊட்டுவதற்கு எழுதகோலை உயர்த்திப் பிடித்த கவிஞர்களின் உள்ளக்குமுறலாய் "கல்லறை மேலான காற்று" சாட்சியம் பெறுகிறது.

**1. ஞானசேகர்**
**2. குரபரன்**
**3. அகிலன் திரு**
**4. நாடி**
**5. இரா. ஜனகன்**
**6. சடாவதணன்**
**7. கா.யோ. கிரிதரன்**
**8. தலவாக்கொல்லை சௌந்தரராஜன்**

ஆகிய எட்டு வளருங்கவிஞர்களின், நம் மண்ணின் கொடூரமான நிகழ்வுகளை நினைவு கூறும் கவிதைத் தொகுப்பாக மிளிர்ந்தமை இன்னோர் சிறப்பாகும்.

ஈரோசின் மாணவ அமைப்பான"மாணவர் இளைஞர் பொது மன்றத்தால்" (GUYS) 1988 இல் வெளியிடப்பட்ட இத்தொகுப்பில் அடங்கிய அனைத்தும் எரிதழல் கவிதைகள். படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சிப் புயலை எழுப்புகின்றன. இவற்றை எழுதியவர்கள் இளம் வளருங்கவிஞர்கள். அவர்கள் ஈழத்தமிழரின் மானுட வாழ்வை தனித்து நின்று பார்க்காமல், போராடும் மக்கள் மத்தியில் நின்று, அவர்களின் துயர துக்கங்களில் பங்கேற்று, மண்ணின் வாசனையை கவிதைகளின் ஒவ்வொரு வரியிலும் காணக் கூடியதாக உள்ளது.

தமிழர்களை பீரங்கிகளுக்கு இரையாக்கி, ஈழ தேசத்தை பிணக்கோலமாக்கி, குண்டு மாரி பொழிந்து கொலைக்கூத்து நடந்தேறிய காலகட்டமது. இனப் பகைமையில் மனித உயிர் மலினமாகிப் போனது. இனவெறியின் வேட்டைக் களமாய் வடமராச்சி மாறி விட்ட கழிவிரக்க நிலையில், ஒரு கவிஞனின் தீனக்குரல் எழுகிறது.

**இனிய வடமராட்சி**
**மீன்கள் துள்ளும்**
**கடலலை ஓரம்**
**பேய்கள் குவியும்**
**பிணங்களை உருட்டும்**
**தேடுதல் வேட் டையின் பேரில்**
**தேவைகளை தீர்த்துக்**
**கொள்ளும்..**
**சோதனை என்னும் பெயரில்**
**பெண்களை சுவைத்துப் பார்க்கும்**
**என மனம் கசியும் கண்ணீர்த்துளிகளே இவ்வரிகள்.**

மேலும் பல அப்பாவித் தமிழர்களின் பூர்விகப் பிரதேசங்களைப் பலாத்காரமாகப் பறித்து இராணுவ ஆதிக்கம் விஸ்தரிக்கப் பட்டது. இன்றும் பறிமுதல் செய்த இப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மீளத்திரும்புவதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கையில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி இலங்கைத் தமிழர்களுக்கு அதீதமான அநீதிகளே இழைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி

**தாயே.. அம்மா...**
**முடியாது வரலாறு...**
**முள்வேலிக்கப்பால்**
**உன் வரலாறு...**
**நீயே தொடர்ந்து கொள்!..**

என ஈழ மக்கள் வாழ்வின் அவலத்தைச் சொல்லி, போரின் கோர முகங்களை உலகிற்கு பறை சான்றுகிறான் இன்னோர் கவிஞன்.

கல்லறை மேலான காற்று, எக்காலமும் நினைவுகள் அழியாத அனல் வீசும் கவிதைக் கணைகளாகவும், மானுட நேசம் மிகுந்து வரும் தென்றலாகவும் தவழ்கிறது. சண்டமாருதமாகவும் சீறுகிறது.

**கல்லறைக்குள் புதைந்தவர்கள்**
**ஊமைகளல்ல**
**விடிவு காண**
**சாவை துச்சமென்று**
**கருதி போராடிய போராளிகள்**

என முழங்குகிறது. தமிழ் மண்ணில் நிகழ்ந்த இவ் வரலாற்றுப் படுகொலை நிகழ்வை சரித்திரமாக வரைந்த கவிதைகளாகவும் நாம் உணரலாம் .

விமானம், தரைவழி, மற்றும் கடல்வழித் தாக்குதல்கள் என மும்முனைகளிலும் படையினர் முன்னேறிச் சென்ற வழிகளில் பலநூற்றுக்கும் மேலும் தமிழ் இளைஞர்களையும் கைது செய்து கப்பலில் ஏற்றி புதிதாக திறக்கப்பட்ட "பூசா" தடுப்பு முகாமுக்கு ஏற்றிச் சென்றனர்.அங்கே கொண்டு செல்லப்பட்ட நூற்றுக் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இதுவரையில் திரும்பவேயில்லை. அதேவேளை போகும் வழியெங்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடுகள் இன்றி சுட்டும் எரித்தும் படுகொலைகள் செய்யப்பட்டனர். இவ்வாறு ஈழத்தமிழர் சாவின் பிடியில் தத்தளித்த நிலையினை...

**ஆண்டவனும் தோற்றான்**
**அரசபயங்கரவாதத்திற்கு**
**மண்ணில் ஒவ்வொருதுகளும்**
**அந்நியர் கால்களில்**
**நசுங்கிப் போனதும்**
**எங்கள் கால்களை இழந்து**
**எங்கள் முகங்களை இழந்து**
**எங்கள் பரம்பரையை இழந்து**
**ஆத்மாவை மாத்திரம்**
**நகத்தின் இடுக்கில் ஒளித்து**
**இன்று வரையிருப்பதை**
**எப்படி மறப்போம்?**

என்கிறான் இன்னோரு கவிஞன். "கல்லறை மேலான காற்று" அள்ளி எரியும் நெருப்புப் துகள்களின் மீதான வருடல்களின் நெருடலாக உணர்ச்சியூட்டுகின்றது.

சர்வாதிகாரம் ஆட்சி செய்யும் மரணத்தின் உலைக்களமாய் ஈழம் உருமாறிய கோரச் சூழலை, ஈழத்தமிழரின் புராதன பெருமை வாய்ந்த கலாச்சார சின்னங்களை அழித்தொழிக்கப்பட்ட குரூரத்தை இன்னொரு கவிதை இப்படி சித்தரிக்கிறது.

**கோயில்களையும் தூளாக்கிய**
**கொடுமை...**
**கொடுமை**
**பயந்தோடி பதுங்கு குழியில்**
**பயங்கரவாதிகளாக்கப்பட்ட**
**மழலைகளை மறக்க**
**மனம் மறுக்கிறது.,**
**மாண்டாண் வெளிகளில்**
**மண்ணே வெடிமருந்தாக**
**மணக்கிறது..,**
**முலைப்பாலை குடிப்பதற்குள்**
**மூச்சை நிறுத்திய**
**முப்படைத் தாக்குதல்...**
**தாயை.. தகப்பனை...**
**தமயனை...,**
**வீட்டு நாயைக்கூட**
**இழந்தோம்.**
**என உள்ளம் பொங்க குமுறுகிறான்.**

இந்நூலின் முன்னுரையில் அல்வாய் கலாமணி மேலம் குறிப்பிடுகையில், வடமராட்சியில் நட்ந்தேறிய ஒப்பரேஷன் லிபரேஷன் கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் நினைவு கூர்வாகக் கொண்டு வெளியாகும் இக்கவிதைகள எழுதியவர்கள் இளங்கவிஞர்கள் என்பதும் இத்தனை அழிப்புகளுக்கு மத்தியிலும் அதன்வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு புதியவர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே நிதர்சனமாகும்.

இக்கவிதைகள் யாவுமே, இராணுவக் கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளன என்பதை வெளிக் காட்டி, வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் வகையிலும் வரலாற்று ஆவணமாகவும் இதற்கு ஓர் இடமுண்டு என முன்னுரையில் அல்வாய் கலாமணி குறிப்பிட்டுள்ளார்.

**- நவீனன்-**

# நரிப்புல் தோட்டம் நடேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு.



மட்டக்களப்பு மாவட்டத்தில் இணைந்த கரங்கள் அமைப்பினால் ஆயித்தியமலை மட்/நரிப்புல் தோட்டம் நடேஸ்வரா தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கும் நிகழ்ச்சி நேற்று காலை பாடசாலையின் அதிபர் வேலுப்பிள்ளை மாதவன் தலைமையில் இடம்பெற்றது.

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுக்கான நிதிப்பங்களிப்பினை அவுஸ்ரேலியா சிட்னி நகரில் வசிக்கும் ராஜா சூப்பர் மார்க்கட் உரிமையாளர் வழங்கி இருந்தார். மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் மிகவும் அதிகஷ்ட, தொழில் வாய்ப்பற்று வாழும் குடும்ப மாணவர்கள் கல்வி கற்கும் ஆயித்தியமலை மட்/நரிப்புல் நடேஸ்வரா தமிழ் வித்தியாலய பாடசாலையில் கல்வி கற்கும் (92) மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

இன் நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சப்பிரமணியம் கணேஸ் அவர்களும், விஷேட அதிதியாக ஆயித்தியமலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் அதிபர் ரி.வித்தியானந்தன், மற்றும் இன் நிகழ்விற்கு அனுசரணை வழங்கிய அவுஸ்ரேலியா சிட்னி ராஜா சூப்பர் மார்க்கட் உரிமையாளரின் சகோதரர் ஆர்.தயாளன் மற்றும் கே.மனோகரன், ஆர்.மனோறிலா, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் பாடசாலையின் ஆசிரியர்கள் பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இணைந்த கரங்கள் அமைப்பு கல்விற்கான சேவையினை ஆரம்பித்து ஒரு வருடமானாலும் நேற்றைய இப் பாடசாலையுடன் சேர்த்து நூறு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கி அவர்களின் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான லோ.கஜரூபன், காந்தன், சி.துலக்சன், மா. ஜெயநாதன், சிருஸ்காந். சதீஸ்குமார், ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் கிரிக்கெட் புதிய சீருடை வெளியீடு



கல்முனை கே பி எல்( மீடு) கிண்ணத்திற்கான போட்டியில் கலந்து கொள்ளும் பிரபல ஈஸ்டர்ன் ரோயல்ஸ் அணியினருக்கான புதிய சீருடை வெளியீட்டு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (21) கல்முனையில் நடைபெற்றது.

ஈஸ்ட்டர்ன் ரோயல்ஸ் அணியின் முகாமையாளரும் பிரபல தொழிலதிபருமான பாலசுப்பிரமணியம் ஜகந்நாத் தலைமையில் நடைபெற்ற சீருடை வெளியிட்டு விழாவில் சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, முன்னாள் காரைதீவு தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உவெஸ்லி கல்லூரி முன்னாள் அதிபர் வி. பிரபாகரன், பிரபல சமூக செயற்பாட்டாளர் செல்வராஜா கணேஷ் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

ஈஸ்டர்ன் ரோயல்ஸ் வீரர்களுக்கு சீருடைகள் உபயோகிக்கப்பட்டன. ஈஸ்டர்ன் ரோயல் அணியின் அனுசரணையாளர்கள் அபிமானிகள் ஆதரவாளர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

# சம்மாந்துறையில் கவிஞர் பாறூக்கின் கவிதை நூல் வெளியீட்டு விழா



ஈழத்தின் முக்கியமான நவீனகவிஞர் எச்.எம். பாறூக் எழுதி தாயதி வெளியீடாக வெளிவந்த "காணாமல் போன சில ஆண்டுகள்" நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (21) ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை அல்மர்ஜான் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்மொழித்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லா கவிஞர் மன்சூர் ஏ காதிர் உள்ளிட்ட பிரமுகர்கள் நயவுரை நிகழ்த்தினர்.

தாயதி நிறுவுனர் தில்லை அம்மா சார்பில் எச். எம். பாறூக் கிடமிருந்து காரையன் கதன் ஃபஷ்றி ஆகியோர் முதல் பிரதியை பெற்றுக்கொண்டனர்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் கவிஞர் எழுத்தாளர் HM பாறூக் எழுதிய "காணாமல் போன சில ஆண்டுகள்" கவிதைத்தொகுப்பு நூல் வெளியீடு விழாவில் இலக்கிய வாதிகள் அபிமானிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# போன் போதையால் வடக்கு கிழக்கில் வாசிப்புவீதம் குறைந்து வருகிறது ! நூல் வெளியீட்டு விழாவில் கலையரசன் எம்பி கவலை!



போதைப்பொருட்களைவிட மிகவும் மோசமானது செல்போன் என்ற போதையாகும். இந்த செல்போன் கலாச்சாரத்தால் வடக்கு கிழக்கில் வாசிப்பு கலாச்சாரம் பொதுவாக குறைந்து வருகிறது.

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கவலை தெரிவித்தார் .

காரைதீவு கோட்டக்கல்விப்பணிப்பாளர் பைந்தமிழ்க்குமரன் ஜே.டேவிட் எழுதிய "கறையான் தின்ற கனவுகள்" என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழாவானது அதிபர் எஸ்.மணிமாறன் தலைமையில் காரைதீவு இ.கி.மி பெண்கள் வித்தியாலயத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இவ் விழாவிற்கு பிரதம அதிதியாக இலங்கை தமிழரசு கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் கௌரவ அதிதிகளாக கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

அங்கு நூல் வெளியீட்டுரையை எழுத்தாளரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா நிகழ்த்தினார்.

முதல் பிரதியை பிரதம பொறியியலாளர் பி.இராஜமோகன் பெற்றுக் கொண்டார். அங்கு பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் மேலும் தெரிவிக்கையில்..

இலங்கையில் தமிழ் மக்கள் பாரிய யுத்தத்தை எதிர்கொண்டு சின்னாபின்னமாக போயிருக்கின்றார்கள். அவர்கள் பீனிக்ஸ் பறவை போல் மீண்டெழுவதற்கு இலக்கியம் வழி சமைக்க வேண்டும்.

இன்று பாடசாலை மாணவர்கள் இந்த செல்போன் கலாச்சாரத்தால் மிகவும் மோசமாக படிப்பை இழந்து வருகிறார்கள். வாசிப்பை தவிர்க்கிறார்கள். சமுதாயத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சகலரும் எப்பொழுதும் ஃபோனை நோண்டிக் கொண்டிருக்கின்ற ஒரு அவலத்தை பார்க்கின்றோம். சமூகத்தின் நல்லது நடக்கின்ற பொழுது அதை தட்டிக் கொடுப்பதை விடுத்து அதில் குறை காண்கின்ற ஒரு சமூகமாக நாங்கள் மாறிக் கொண்டிருக்கிறோம். எமது சமூகம் வளர வேண்டுமாக இருந்தால் புதிய புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து அதனூடாக நாங்கள் வெற்றி அடைய வேண்டும்.

திரு ஜெ டேவிட் அவர்கள் இறுக்கமாக கல்வி பணிக்குள் இலக்கிய பணியையும் ஆற்றிவருவது பாராட்டுக்குரியது என்றார்.

நூலாசிரியர் டேவிட் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். நூல் நயவுரைகளை முன்னாள் தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் கண. வரதராஜன் திறனாய்வாளர்களான ஆத்ம ரூத் சந்திரிகா ஜெஸ்மி எம் முஸா ஆகியோர் நிகழ்த்தினர்.

விசேட அதிதிகளாக கல்முனை வலய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி வரணியா சாந்தரூபன் பிரதம பொறியியலாளர் பி.ராஜமோகன், நிந்தவூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.ஷரிபுதீன், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி.ஜெயசிறில் கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.சரவணமுத்து, நீர்பாசன திணைக்களப் பொறியியலாளர் வி. விஜயசாந்தன் , சம்மாந்துறை கல்வி வலய உதவி கல்வி பணிப்பாளர் வீ.ரீ.சகாதேவராஜா, கல்முனை கல்வி வலயத்தின் உதவி கல்வி பணிப்பாளர் ஏ.சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## பொது சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனம் வழங்கி வைப்பு!



மத்திய சுகாதர அமைச்சினால் கிழக்கு மாகாணத்திற்கு நியமனம் செய்யப்பட்ட 5 பொது சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (22) கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் இடம் பெற்றது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதன் வழங்கி வைத்தார்.

## மயூரன், கிஷோர், திலகராணி மீதான வழக்கு ஒத்திவைப்பு.



நீதிமன்ற தீர்ப்பை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணாகவும் நடந்து கொண்டதாக தெரிவித்து நேற்றைய தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு முன்னாள் பிரதேசசபை உப தவிசாளர் செ.மயூரன், முன்னாள் நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் திலகராணி, சாவகச்சேரி பிரதேச செயலர், கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்றைய தினம் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வழக்காளி தரப்பு சட்டத்தரணி குறித்த நபர்கள் நீதிமன்ற தீர்ப்புக்கு முரணாக நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையாக செயற்பட்டுள்ளார்கள் எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களான செ.மயூரன், ஞா.கிஷோர், திலகரணி ஆகியோர் சார்பில் மன்றில் முன்னிலையாகிய சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன் தனது தரப்பினர் தனிநபர் பிடித்து வைத்திருந்த மூன்று கிராம மக்கள் பாவிக்கக் கூடிய பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மக்கள் பாவனைக்கு மீட்டுத் தருமாரு கோரியே கிராம மக்களோடு போராட்டத்தில் ஈடுபட்டனர். நீதிமன்றை தீர்ப்பை அவமதிக்கும் வகையில் செயல்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

சட்டத்தரணிகளின் வாதத்தை கேட்ட பதில் நீதிவான் எதிர்வரும் ஜூன் மாதம் 1ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் அன்று அனைவரும் தவறாது முன்னிலையாகுமாறு தெரிவித்து வழக்கினை ஜீன் 1 ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். தனியாரால் அபகரிக்கப்பட்ட இராமாவில் தாவளை இயற்றாலை ஊரெல்லை வீதியை பொதுமக்கள் பாவனைக்கு மீட்டுத் தருமாறு கோரி சாவகச்சேரி பிரதேச சபைக்கு முன்பாக கிராம மக்களோடு இணைந்து மயூரன், கிஷோர், திலகராணி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து சாவகச்சேரி பிரதேசபை கொடிகாமம் பொலிஸாரோடு இணைந்து பிரதேச சபையில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் தனியாரால் அபகரிக்கப்பட்டிருந்த குறித்த வீதியை அளவீடு செய்து எல்லை வேலகளை அகற்றி பொதுமக்கள் பாவனைக்காக திறந்து விட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே தனியாரால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகளை 18.01.2021 ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை வலிதற்றதாக்கும் விதத்திலும் அதற்கு முரணான வகையிலும் செயற்பட்டதாக தெரிவித்து மன்றிற்கு அழைத்திருந்தனர்.

## வவுணதீவில் இருந்து வாவி ஊடாக தோணியில் மட்டு நகருக்கு கசிப்பு கடத்தி வந்த இருவர் கைது 30 லீற்றர் கசிப்பு மீட்பு



வவுணதீவு பிரதேசத்தில் இருந்து மட்டக்களப்பு நகர் சேத்துக்குடா பிரதேசத்திற்கு வாவி ஊடாக மீன்பிடி தோணியில் கசிப்பு கடத்தி வந்த இருவரை ஞாயிற்றுக்கிழமை (21) இரவு கைது செய்ததுடன் 30 லீற்றர் கசிப்பை மீட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மட்டு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள சேத்துக்குடா வாவி பகுதியில் சம்பவதினமான நேற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜெயந்த பண்டாரவின் ஆலொசகைக்கமைய சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றம் ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்பெக்ஸ்டர் கிருபாகரன, சப் இன்பெக்ஸ்டர் ஏம்.எம்.ஏ.ஷாகி தலைமையிலான பொலிஸ் குழுவினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதன் போது வவுணதீவு பகுதியில் இருந்து வாவி ஊடாக மீன்பிடி தோணியில் சட்டவிரோதமாக கசிப்பு எடுத்து வந்த இருவரை கைது செய்ததுடன் 30 லீற்றர் கசிப்பு மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய தோணி ஒன்றையும் மீட்டனர்

இதில் கைது செய்யப்பட்டவர்கள் 60 மற்றும் 19 வயதுடையவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு தலைமையக பொலிசார் பாடசாலை மாணவர்களுக்கு அறிவித்தல்

மட்டக்களப்பு தலைமைய பொலிசார் பாடசாலை மாணவர்களுக்கான அறிவித்தல் எனும் தலைப்பில் நாட்டில் அண்மை காலமாக சிறுவர்கடத்தல் அதிகரித்துள்ளது எனவே பாடசாலை மாணவர்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் கொண்ட துண்டுபிரசுரம் ஒன்றை நேற்று திங்கட்கிழமை (22) பொலிசார் விநியோகித்துள்ளனர்.

இதில் பாடசாலை முடிந்தவுடன் மாணவர்கள் அநாவசியமாக வெளியில் நிற்காமல் வீட்டுக்கு உடன் செல்ல பணிப்புரை வழங்கல், இனம் தெரியாதோர் உண்பதற்கு ஏதாவது கொடுத்தால் வாங்க வேண்டாம் எனவும். இனம் தெரியாதேர் வாகனங்களில் ஏற்றிச் சென்று வீடுகளுக்கு விடுகின்றோம் என்றால் வாகனங்களில் ஏற வேண்டாம் எனவும் மாணவர்கள் மிகவும் அவதானமாக இருக்கு மாறம் இது தொடர்பாக பெற்றோருக்கு தெரியப்படுத்துமாறு மாணவர்களுக்கு அறிவுரை வழங்குமாறும்

சந்தேகத்துக்கிடமாக யாராவது நடமாடினால் பொலிஸ் அவசர தொலைபேசி அழைப்பிற்கு அல்லது 065 2224356, 065 2224422 என்ற இலக்கத்துக்கு அறிவிக்குமாறு துண்டுபிரசுரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு துண்டுபிரசுரம் வழங்கப்பட்டுள்ளது.

## மத்தியிலிருந்து நிதியை பெற்று வடக்கை அபிவிருத்தி செய்யவேண்டிய பாரிய பொறுப்பு ஆளுநருக்கு உள்ளது! வினோ எம்.பி



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக வடக்கு மாகாணத்தில் கூடுதலான நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள தாங்கள், வடக்கு மாகாண ஆளுநருடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று கடமைகளை பெறுபேற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்திருந்தார்.

மத்திய அரசாங்கத்தின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதியாக இருந்தாலும் தற்போது வட மாகாண சபை இயங்காமலிருக்கின்றது. வடமாகாணமென்பது அரசியலமைப்பிலுள்ள 13ம் திருத்தச்சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட முறைமையின் கீழ் இந்த ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவ்வாறு காணப்படுகையில் இலங்கையின் சட்ட திட்டங்களிற்கேற்பவும் அரசியலமைப்பிற்கேற்பவும் வடமாகாணசபையை ஏற்றுக்கொண்டு அதனூடாக மத்திய அரசிடமிருந்து நிதியை பெற்று வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யவேண்டிய பாரிய பொறுப்பு ஆளுநருக்கு உள்ளது.

கடந்த காலங்களில் பல ஆளுநர்கள் பதவிவகித்தாலும் இரண்டாவது தடவையாக சார்ள்ஸ் அவர்கள் பதவியேற்றுள்ளார். அவருக்கு எங்களுடைய அரசியல் கடந்து அபிவிருத்தி மற்றும் ஏனைய அத்தியாவசிய விடயங்களிலே ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக உள்ளோம்.

அவரும் இலங்கை அரசியலமைப்பிலுள்ள மாகாணசபை முறைமையை ஏற்றுக் கொண்டு மாகாணத்திற்கு கூடுதலான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

நிர்வாக அமைப்புக்கள் யாழ் மாவட்டத்திற்குள் முடக்கப்படாமல் குறிப்பாக வன்னி மாவட்டம் உட்பட அனைத்து இடங்களிற்கும் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். - என்றார்.

## புதிதாய் முளைக்கும் மற்று...

மேற்கொண்ட போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் பல பாகங்களிலும் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. இந்நிலையில், மன்னார் உயிலங்குளம் பிரதேசத்தில் இராணுவத்தின் 542ஆவது படைப்பிரிவினால் அப்பகுதியில் புதிதாக ஒரு பௌத்த விகாரையை அமைக்க இராணுவத்தினால் வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இவ்விடயத்தை வன்மையாக கண்டிக்கின்றேன்.

தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் நல்லிணக்கம் ஏற்படாமைக்கு இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக காரணங்களாக உள்ளது. மடு, முருங்கன், திருக்கேதீஸ்வரம், சௌத்பார், தலைமன்னார் போன்ற இடங்களில் 5 பௌத்த விகாரைகள் உள்ளது.

ஆனால் இங்கே பௌத்த குடும்பங்கள் 50 கூட இல்லை. பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் இராணுவம் புதிதாக பௌத்த ஆலயங்களை அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இந்த விடயத்தை உடனடியாக நான் புத்தசாசன அமைச்சருடைய கவனத்திற்கும், மாவட்ட திணைக்கள அதிகாரிகளுக்கும் இவ்விடயம் குறித்து தெரியப்படுத்துகின்றேன். மக்களிடம் இருந்து எனக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றது. குறித்த பிரதேசத்தில் இராணுவத்தினால் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக தெரிவித்தனர். இந்த நிலையிலே நேரடியாக குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

## இனப்படுகொலை சூத்திரதாரி...

ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கூறுகையில்,"1983 ஆம் ஆண்டு பொரளை மாயனத்திலே இன படுகொலை ஆரம்பிக்கப்பட்டது. உயிரிழந்த இராணுவத்தினரை பொரளை மாயனத்திற்கு புதைக்க கொண்டு வந்து, அந்த இடத்தில் கூடிய இன வெறியர்கள், காடையர்கள்,குண்டர்கள் தமிழர்களை அழிக்க ஆரம்பித்தார்கள்.

அங்கிருந்து தான் தமிழர்களின் கடைகள் அழிக்கப்பட்டு, அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

இதை தெற்கு மக்களுக்கு சொல்லவே நாங்கள் பொரளை மயானத்தில் நினைவேந்தலை அனுஷ்டிக்க நினைத்தோம்.

நாடு இன்றும் இனப்படுகொலை சூத்திரதாரிகளால் ஆட்சி செய்யப்படுகின்றது. அது ஜனாதிபதியாக இருக்கலாம். மகிந்த ராஜபக்ச குழுவினராக இருக்கலாம். அவர்கள் தற்போதும் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். "என கூறியுள்ளார்.

## ஈழத்தில் நடந்தது இனப்படு...

கருதினால், அது அவர்களின் முட்டாள்தனமே என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று கனேடிய பிரதமர் கூறியிருக்கும் கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது தொடர்பில் க.சுகாஷ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பிலே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கூறுகையில், "ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்பதையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கச் சர்வதேச விசாரணை நடாத்தப்பட வேண்டுமென்பதையும் 2010 முதல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தது.

இதன்போது, தமிழ்த் தரப்புக்கள் அவற்றை மறுதலித்து, இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசைக் காப்பாற்றும் வகையில் ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை அல்லவென்றும் அது வெறும் யுத்தக் குற்றமென்றும் இனப்படுகொலைக்கு ஆதாரங்களில்லை என்றும் கூறி தமிழினத்தைக் காட்டிக் கொடுத்தது.

தற்சமயம் கனேடியப் பிரதமரே "இலங்கையில் நடந்தது இனப்படுகொலை" என்று கூறியுள்ளதால், எங்கே தமது காட்டிக்கொடுப்புக்களைத் தமிழ் மக்கள் கண்டுபிடித்து விடுவார்களோ என்ற அச்சத்தில், அரச எடுபிடிகளான தமிழ் அரசியல் தலைமைகள் சிலர் நடிப்பதையும் இனப்படுகொலை என்று வாயளவில் கூறி ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளகப் பொறிமுறைக்கு உடன்படுவதையும் வாக்குகளுக்காக முள்ளிவாய்க்காலுக்குச் சென்று விளக்கேற்றி வருவதையும் தமிழ் மக்கள் இனியும் கண்டுபிடிக்க மாட்டார்களென்று அரச எடுபிடித் தமிழ்த் தலைமைகள் கருதினால், அது அவர்களின் முட்டாள்தனமே. "என தெரிவித்துள்ளார்.

## ஒரு பக்கச்சார்பற்ற விசாரணை...

மே 18ஐ தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையைக் கனேடிய நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது.

இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது என அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கண்டனம் வெளியிட்டதுடன் அதனை நிராகரித்துமிருந்தார்.

இவை தொடர்பில் இரா.சம்பந்தனிடம் கேள்வி எழுப்பப்பட்ட போதே இந்த விடயங்களை அவர் கூறியிருந்தார். மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை தான் என்று கனேடியப் பிரதமர் கூறியிருக்கும் விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. அது இந்த நாட்டில் வாழும் சிங்கள மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களுக்கும் தெரியும்.

இலங்கையில் போர் உக்கிரமடைந்த காலத்திலும், போர் முடிவுக்கு வந்த காலத்திலும் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை.

அதை மறுக்கும் தற்போதைய இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அப்போது அமைச்சராக இருக்கவில்லை. உண்மையை அம்பலப்படுத்தும் கனேடியப் பிரதமரின் அறிக்கையை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நிராகரித்துள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அலி சப்ரியின் பதிலை நாம் உதாசீனம் செய்கின்றோம். அது பெறுமதியற்ற நிராகரிப்பு.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த தீர்மானங்களை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. பல்வேறு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை இலங்கை அரசாங்கம் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையைச் செய்யவில்லை.

வெளிநாட்டு விசாரணைக்கும் இலங்கை அரசாங்கம் அனுமதிக்கவில்லை. உள்நாட்டு விசாரணையையும் நடத்தவில்லை. ஏன் உள்நாட்டு விசாரணை இல்லை? என்ன காரணத்துக்காக உள்நாட்டு விசாரணை இல்லை?

உள்நாட்டில் பக்கச்சார்பற்ற சுயாதீனமான விசாரணையை இலங்கை அரசாங்கம் இதுவரை நடத்தவேயில்லை. அதிலிருந்து தாங்கள் செய்தது குற்றம் விசாரணை நடத்தினால் உண்மை வெளிப்படும் என்றும் இலங்கை அரசு அஞ்சுகின்றது என்பது நன்றாகப் புரிகின்றது. எனவே, அலி சப்ரியின் பெறுமதியற்ற கருத்துத் தொடர்பில் நான் அதிகம் பேச விரும்பவில்லை. அவரின் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம். இலங்கையில் இனப்படுகொலை நடந்தது உண்மை. அது தொடர்பான கனேடியப் பிரதமரின் அறிக்கையை வரவேற்கின்றோம். இனியாவது இப்போதாவது ஒரு பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த முடியுமா? என்று இலங்கை அரசிடம் கேட்கின்றோம். இலங்கை அரசாங்கத்திற்கு துணிவிருந்தால் அதைச் செய்யட்டும் என்றார்.

## கொழும்பில் முள்ளிவாய்க்கால்...

கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்திய அராஜகக் கும்பலைக் கைது செய்ய வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொரளையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வை குழப்ப முயன்றவர்களை அந்த நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்களை ஏன் இன்னமும் கைது செய்யவில்லை? இந்தக் கும்பலின் நடவடிக்கை அரசின் ஆதரவுடன் நடைபெற்றதா?

இந்த அராஜகத்தைப் புரிந்த குறித்த அமைப்பு மீது அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படியான மோசமான நடவடிக்கைகளாலதான் நாட்டில் இன்னமும் இனவாதமும் மதவாதமும் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் நடந்தது இன...

நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப்பிழைத்தோரினதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது என அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகம் ஒன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கனேடியப் பிரதமரின் அறிக்கை தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள கருத்தை முழு மனதுடன் வரவேற்கின்றோம்.

உண்மை நிலைமை அறியாது சர்வதேசத் தலைவர்கள் கண்டபடி அறிக்கைகளை வெளியிடக்கூடாது. இலங்கையில் போர் நடந்தது உண்மை. அதில் தமிழீழ விடுதலைப் புலிகளும், இராணுவத்தினரும் உயிரிழந்தது உண்மை.

மக்களும் துரதிஷ்டவசமாக உயிரிழந்ததும் உண்மை. அதற்காக இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கனேடியப் பிரதமரின் கூற்றை அடியோடு மறுக்கின்றோம் என தெரிவித்துள்ளார்.

## பச்சிலைப்பள்ளியும் மருதங்...

நேற்று முன்தினம் பளை வைத்தியசாலை முன்பாக திரண்ட மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர் இதன் பின்னர் சமூகசெயற்பாட்டாளரான முரளிதரன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள வைத்தியர் சின்னையா சிவரூபனுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என பாதுகாப்பு அமைச்சர் கடிதங்கள் வழங்கியுள்ள போதும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு இதுவரை நியமனக்கடிதங்களை வழங்கவில்லை என சமூக செயற்பாட்டாளரான முரளிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேசமும் யாழ் மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேசமும் கடுமையாக பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பதாக முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

பச்சிலைப்பள்ளியும் மருதங்கேணியும் பாவப்பட்ட பிரதேசம் என முரளிதரன் கவலை வெளியிட்டிருந்தார்.

## தமிழர்களின் காணியை பறித்து...

இடையூறு ஏற்படுத்தி போராட நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. அத்துடன், சட்டவிரோத போராட்டங்களையும் தடைவிதித்துள்ளது.

தடை அறிவித்தலை பொலிசார் வாசித்ததும், போராட்டத்திலிருந்தவர்கள் கலைந்து சென்றனர். எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும், மற்றும் சிலரும் அங்கு தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சற்று நேரத்தின் பின், கலைந்து சென்றவர்களும் போராட்டக்களத்துக்கு திரும்பினர். இரவு 7.15 மணிவரை அங்கு போராட்டம் நடந்தது. இன்றும் போராட்டம் நடக்கும், 26ஆம் திகதி வரை போராட்டம் தொடரும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர்.

## பதவியேற்றவுடன் திட்டங்களை...

கருத்து தெரிவித்த அவர், "என்னை வாழ்த்துவதற்கு வருகை தந்த மத குருமார் சில கோரிக்கைகளை முன் வைத்திருந்தார்கள்.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக அணுகி அதற்கு தீர்வு பெற்று தருமாறு கூறியிருக்கின்றார்கள். எனவே அந்த விடயத்தினை நான் சரியான முறையில் அணுகி அதற்கு தீர்வுகளை பெற்று தருவதற்கு முயற்சிப்பேன்.

இந்த மாகாணத்தில் இருக்கின்ற அனைத்து மதங்களும் தங்களுடைய தனித்துவமான மத அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. அந்த வகையில் அதற்கான சகல ஏற்பாடுகளையும் எடுக்க நான் முயற்சிப்பேன்.

அதேபோல, வட மாகாண அவைத்தலைவர் யாழ் மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சனை சம்பந்தமாக எடுத்துக்கூறியிருந்தார். ஏற்கனவே பாலியாறு சம்பந்தமான ஒரு பிரேரணையை தாங்கள் தயாரித்து வைத்திருப்பதாகவும் அதை முன்னெடுத்துச் செல்லுமாறும் கூறியிருக்கின்றார். அது சம்பந்தமாகவும் நான் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக உள்ளேன். யாழ்ப்பாண மக்களுக்கு நீண்ட காலமாக இருக்கின்ற குடிநீர் பிரச்சினையை நான் உணர்ந்திருக்கின்றேன். நான் கூட இங்கு வருகின்றபோது குடிநீர் பிரச்சினையை தனிப்பட்ட ரீதியாக உணர்ந்திருக்கின்றேன்.

எனவே அந்தப் பிரச்சினையயை தீர்க்க நிச்சயமாக முக்கியமாக கவனம் எடுப்பேன்" - என்றார்.

# சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளராக றியாத் ஏ. மஜீத் கடமையேற்பு!






சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக அண்மையில் பதவியுயர்வு பெற்று கடமையாற்றிய றியாத் ஏ. மஜீத் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளராக நியமனம் பெற்று கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று (22) திங்கட்கிழமை சமுர்த்தி வங்கிச் சங்க காரியாலயத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ எல்.யூ. ஜுனைதா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.ஹிதாயா, சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் எம்.யூ.ஹில்மி, வலய உதவி முகாமையாளர் எம்.எஸ். எம்.நௌஷாட், கருத்திட்ட உதவியாளர் எம்.எம்.எம். முபாறக், பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ. சம்சுதீன், செயலாளர் எம்.முபிதா, முன்னாள் தலைவர் ஏ.எம்.அலாவுதீன் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

றியாத் ஏ. மஜீத் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக 1996.03.04 ஆம் திகதி கல்முனை பிரதேச செயலகத்தில் முதல் நியமனம் பெற்று சாய்ந்தமருது - 14 ஆம் பிரிவில் 3 வருடங்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றினார். பின்னர் சாய்ந்தமருது உப பிரதேச செயலகம் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டதனால் அதில் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கிச் சேவை 2001 ஆம் ஆண்டு சாய்ந்தமருதில் திறந்து வைக்கப்பட்ட போது அதில் ஸ்தாபக உதவி முகாமையாளராக நியமிக்கப்பட்டு சுமார் 16 வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

அவரது காலப்பகுதியில் சமுர்த்தி வங்கி பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளது. பின்னர் சாய்ந்தமருது சமுர்த்தி வலயத்தின் உதவி முகாமையாளராக 5 வருடங்கள் சிறப்பாக கடமையாற்றியுள்ள இவர், அதனை தொடர்ந்து சாய்ந்தமருது சமுர்த்தி மகா சங்கத்தின் உதவி முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டு 7 மாதங்கள் கடமையாற்றியுள்ளார்.

அண்மையில் சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக பதவியுயர்வு பெற்று கடமையாற்றி வந்த நிலையில், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளராக றியாத் ஏ. மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சிலோன் மீடியா போரம் ஊடக அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே சமயம் சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி முகாமையாளராக கடமையாற்றிய எஸ். றிபாயா சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளராக நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

# துபாயில் உயிரிழந்த யாழ். இளைஞன் கிடைக்காத நியாயம்..!

## தாயார் விடுத்துள்ள பகிரங்க கோரிக்கை



யாழ்ப்பாணம் - சுண்டுக்குளி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய கமலதாஸ் நிலக்சன் என்பவர் கடந்த அன்று துபாயில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளதாக அவரது தாயார் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தனது மகனின் சடலத்தினை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு தேவையான நிதி உதவியை பெற்று தருமாரு கோரிக்கை விடுக்கும் முகமாக அவரது தாயார் நேற்று ஊடக சந்திப்பொன்றினை அவரது இல்லத்தில் ஏற்பாடு செய்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த (27. 04.2023) அன்று துபாயில் வைத்து படுகொலை செய்யப்பட்ட எனது மகனின் மரணத்தை தற்போது தற்கொலை என கூறுகின்றார்கள். நான் தூதரகம் ஊடாக பல தரப்பினர்களுக்கு நியாயம் கேட்டு கடிதம் எழுதினேன். ஆனால் யாரும் எனக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் படுகொலை செய்யப்பட்ட எனது மகனின் சடலத்தை கொண்டு வருவதற்கு 14 இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. மகனின் சடலத்தை நாளை மறுதினம்(24.05. 2023) தாங்கள் பொறுப்பேற்க வேண்டும். அதற்கு தேவையான நிதியை தந்து உதவி செய்ய வேண்டும் என்று புலம் பெயர் தமிழர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன். என கூறியுள்ளார்.

# யாழில் பாடசாலை மாணவியிடம் அங்க சேட்டையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாய்

## நையப்புடைத்த மக்கள்



யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியில் வீதியால் சென்ற பாடசாலை மாணவியிடம் அங்க சேட்டையில் ஈடுபட்ட இராணுவ சிப்பாயை அப்பகுதிமக்கள் நையப்புடைத்து காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை மதியம் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பலாலி காவல்துறையினர் மற்றும் இராணுவ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிமையில் சென்ற பாடசாலை மாணவியை பின்தொடர்ந்த குறித்த இராணுவ சிப்பாய் அங்கசேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் மாணவி குரலெழுப்பிய நிலையில் அங்கு கூடிய பொதுமக்கள் குறித்த இராணுவ சிப்பாயை நையப்புடைத்து காவல்துறையில் ஒப்படைத்ததுள்ளனர்.

# வடக்கு ஆளுநரின் பதவியேற்பு நிகழ்வு..!

## கண்டுகொள்ளாத யாழ் மாவட்ட எம்.பிகள்..!




வடக்கு மாகாண ஆளுநர் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்றைய தினம் ஆளுநர் செயலத்தில் இடம்பெற்றது குறித்த நிகழ்வில் யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை,

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் திணைக்கள தலைவர்கள் துறை சார் செயலாளர்கள் பங்கு பற்றியிருந்த நிலையில் யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவத்தைப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் குறித்து நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை எனினும் வன்னி மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வினோ எம்.பி. ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் சுமந்திரன் எம்.பி திடீர் சந்திப்பு..!




கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆளுநருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் கலந்துரையாடினார் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

# வடக்கு மாகாணத்திற்கான அதிகாரங்கள் மத்திக்கு செல்லகூடாது! ஆளுநரிடம் வலியுறுத்திய சார்ள்ஸ் நிர்மலநாதன்.!



வடக்கு மாகாணத்தினுடைய முழுமையான அதிகாரங்கள், மத்திக்குச் செல்லாதபடி புதிய ஆளுநர் பார்த்துக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேற்று கடமைகளை பொறுபேற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்திருந்தார். கடந்த காலங்களில் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணியாற்றிய போது பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தாலும் அதனை நடைமுறைப் படுத்துவதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவாக இருந்தது.

தற்போது அந்த விடங்களை ஞாபகப்படுத்தியுள்ளேன். புதிய ஆளுநர் மாகாணத்தினுடைய முழுமையான அதிகாரங்கள் மத்திக்குச் செல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். தற்போது மாகாணத்திலுள்ள பிரதேச செயளாளர்கள், பொலிஸ்மா அதிபர்களைக் கூட முதலமைச்சரினுடைய அனுமதியோடு நியமிக்கப்பட வேண்டுமென, 13ம் திருத்தச் சட்டத்தில் சட்டவரைபு காணப்படினும் எல்லாம் தலைகீழாக மாறியுள்ளது.

எனவே மாகாணத்திலுள்ள அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.- என்றார்.

# குடாநாட்டு குடிநீர் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரிய அவைத் தலைவர் சி.வி.கே. கோரிக்கை..!



யாழ்ப்பாணத்திற்கு குடிநீரை கொண்டுவர நடவடிக்கை எடுங்கள் என ஆளுநரிடம் சிவி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கடமைகளை பொறுப்பிற்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எங்களுடைய இலக்குகள் அபிலாசைகள் என்ன என்பதை நாங்கள் சொல்லித்தான் உங்களுக்கு தெரிய வேண்டியது இல்லை. நீங்கள் எங்களில் ஒருவர். இரண்டு விடயங்களை நான் சொல்ல வேண்டிய நிலையில் உள்ளேன். 13வது திருத்தச் சட்டத்தைப் பற்றி பேசுகின்றோம். நான் அதற்கு மேலாக என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகின்றேன்.

13ன் படி நீங்கள் கொஞ்சம் தெளிவாகவும் இறுக்கமாக இருப்பீர்கள் என நாங்கள் நம்புகின்றோம். அந்த வகையில் இருக்கின்ற பல விடயங்கள் பிடுங்கப்பட்டுள்ளன. அவற்றை எவ்வாறு மீளப் பெறலாம் என்பது பற்றி நான் சொல்லிதான் தெரிய வேண்டியதில்லை. அது உங்களுக்கு தெரிந்த விடயமே.

சில ஆளுநர்கள் நிர்வாகத்திறன் அற்ற ஆளுநராகவும், மாகாண முறை தெரியாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் உங்களுக்கு மாகாண அனுபவம் உண்டு. ஆகவே எடுத்த விடயங்கள் எடுக்கப்பட்ட விடயங்கள் அல்லது பிடுங்கப்பட்ட விடயங்களை திருப்பி பெறுவதிலே உங்களுடைய முயற்சி காணப்பட வேண்டும்.

மாகாணத்திற்குரியதாக இருப்பதை மத்தி எடுப்பதை நாங்கள் தவிர்க்க வேண்டும். குறிப்பாக அது தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றது. மாகாணத்திற்குட் பட்ட விடயங்கள் எடுக்கப்படுவற்றை தடுக்க வேண்டும்.

எமது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண்மணி நீங்கள். எனவே இங்குள்ள அதிகாரிகளும் உங்களுக்கு ஒத்துழைப்பார்கள். எனவே வடக்கு மாகாண மக்களுக்கு உங்களால் முடிந்தளவு உதவுங்கள்.

அதேபோல யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஜனாதிபதியுடன் பேசி உரிய நடவடிக்கை எடுங்கள். குறிப்பாக இரணைமடுவில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வருவதாக இருந்தது. ஆனால் தற்பொழுது சாத்தியமற்ற விடயமாகிவிட்டது.

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான குடிநீரைக் கொண்டு வரக்கூடிய நடவடிக்கையினை உடன் செயற்படுத்துங்கள். அதற்கு நாங்கள் எங்களாலான பூரண ஒத்துழைப்பினை வழங்குவோம். - என்றார்.

# மலையக மக்களுக்கு எதிரான போலி பிரச்சாரத்தை பரப்ப வேண்டாம்: ஜீவன் தொண்டமான்



சமூக பாதுகாப்பு உதவி திட்டங்களில் இருந்து மலையக மக்களின் பெயர்கள் நீக்கப்படுவதாக போலி பிரச்சாரத்தை முன்னெடுத்து, மக்கள் மத்தியில் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர் என நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் நேற்றைய தினம் (22.05.2023) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இம்முறை உரிய வகையிலேயே பதிவுகள் இடம்பெற்றுள்ளன. உதவி திட்டங்களை பெறுவதற்கு தகுதியான அனைவருக்கும் அது கிடைக்கும். சமுர்த்தி உள்ளிட்ட சமூக பாதுகாப்பு நிதி உதவிகளின் போது மலையக சமூகம் ஓரங்கட்டப்படுகின்றது. அவர்களின் பெயர்கள் நிராகரிக்கப்படுகின்றன என்ற பிரச்சாரத்தை எதிரணிகள் சில முன்னெடுத்து, மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

முன்னர் இந்த குறைபாடு இருந்திருக்கலாம் ஆனால் இம்முறை எவருக்கும் பாகுபாடு காட்டாமல் அதிகாரிகள் நேரில் சென்று தகவல்களை திரட்டியுள்ளனர். 15 லட்சத்துக்கும் மேற்பட்ட மலையக தமிழர்கள் உள்ளனர். அவர்களில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் பேர்வரை பெருந்தோட்டங்களில் தொழில் புரிகின்றனர்.

இவர்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களை முறையாக அடையாளம் காணவேண்டும். மாறாக முழு சமூகத்தையும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சமூகமாக அடையாளப்படுத்த முற்படுவது, அந்த சமூகத்தை கொச்சைப்படுத்தும் செயலாகும்.

நுவரெலியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஒரு லட்சத்து 65 ஆயிரம் பேரில், 85 ஆயிரம் பேர் வரை பெருந்தோட்டப்பகுதிகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாண கல்வியில் புதிய திருப்பங்களை ஏற்படுத்த ஆளுநர் செந்தில் தொண்டமான் தீவிரம்!



கிழக்கு மாகாணத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாத அனைத்து குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை 30 நாட்களுக்குள் முடித்து அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாகாணத்தின் கல்வி முன்னேற்றம் குறித்து பிரதம செயலாளர், கல்வி செயலாளர், கல்வி மாகாண பணிப்பாளர், கல்வி வலய பணிப்பாளர் மற்றும் பிரதேச கல்வி அதிகாரி ஆகியோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். மாகாண கல்வி வலயங்களில் உள்ள நிதிக் குற்றங்கள், பாலியல் வன்கொடுமை மற்ற அங்கீகரிக்கப்படாத நடைமுறைகள் பற்றிய அறிக்கைகளை ஒப்படைத்து வலுவான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

கலந்துரையாடலின் போது பின்வருவன வற்றை உடனடியாக செயல்படுத்த அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். 52% முதல் மிகக் குறைந்த பெறுபேறு களை கொண்ட கல்வி வலயங்கள் தொடர் பான அறிக்கைகளை 7 வேலை நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளதுடன், ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ள பாடசாலைகளுக்கு அதிக எண்ணிக்கையிலான ஆசிரியர்களை நியமிக்கவும் தீர்மானம் எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் உள்கட்டமைப்பு வசதிகள் சேதமடைந்த பாடசாலைகள் பற்றிய அறிக்கைகளை உடனடியாக பெற்றுத்தரும் அறிவுறுத்தியுள்ளார். பாடசாலை வளாகத்தைச் சுற்றி போதைப் பொருள் பாவனை தொடர்பில் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் எனவும் ஆளுநர் செந்தில் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் இடைநிற்றலை நிறுத்த புதிய திட்டத்தை தொடங்குவதற்கும் உத்தேசித்துள்ளார். கல்வித் திட்டங்களுக்கு ஆதரவாக எம்பேஸ்ஸோயின் கூடுதல் நிதி உதவியைப் பெறவும் கர்ப்பிணி ஆசிரியைகள் முன்னுரிமை அடிப்படையில் அருகில் உள்ள பாடசாலைகளில் இணைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் கையாடல்:
## 20 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மாயம்..!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பொருள்கள் கையாடல் குறித்த விசாரணைகளில் பல திடீர் திருப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

கையாடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் மூன்றரை இலட்சம் என சம்பந்தப்பட்ட பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அறிக்கையிட்டிருந்தாலும், அது இரண்டு மில்லியன்களைக் கடந்திருக்கலாம் எனப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் சிலர் சந்தேகந் தெரிவித்துள்ளனர்.

இதனால் முறையான விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தக் கையாடல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கெனப் பேரவையினால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் இருவர் விசாரணைகளில் பங்குபற்றாமல் வெளியேறியிருப்பதையடுத்து கையாடல் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்குப் புதிதாக இரண்டு உறுப்பினர்களைப் பல்கலைக் கழகப் பேரவை நியமித்துள்ளது.

கையாடல் இடம்பெற்றதாகக் கூறப்படும் பகுதியுடன் நேரடித் தொடர்பு இல்லாத உறுப்பினர்களைக் கொண்டு பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக பராமரிப்புப் பகுதியின் களஞ்சியத்தில் ரூபா 3 லட்சத்து 75 ஆயிரம் பெறுமதியான பொருட்கள் காணாமல் போயுள்ளதாக பராமரிப்புப் பகுதியின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளால் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன், அவ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில் களஞ்சிய சாலைப் பணியாளர்கள் சிலர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுமிருந்தது. எனினும் சம்பவம் தொடர்பில் அதிகாரிகளின் தவறை மறைப்பதற்காக அப்பாவித் தொழிலாளரகள் மீது குற்றஞ்சாட்டப்படுவதாகவும், சம்பவத்துடன் நேரடித் தொடர்பில்லாதவர்களே பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டி வந்தன.

இது தொடர்பாகப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்களுக்கும் தொழிற்சங்கங்கள் தெரியப்படுத்தியிருந்தன.

இதனிடையே, கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கூடிய பேரவை, பூர்வாங்க விசாரணை அறிக்கையின் அடிப்படையில் களஞ்சிய சாலைப் பொறுப்பாளர் ஒருவரை விசாரணைகள் முடிவுறும் வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தியதுடன், சம்பவம் தொடர்பில் அவருக்குக் குற்றப்பத்திரிகையையும் அனுப்பியிருந்தது. முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கென மூவர் கொண்ட குழுவையும் நியமித்திருந்தது.

குற்றஞ் சாட்டப்பட்ட களஞ்சிசாலைப் பணியாளர் தன் மீதான குற்றச் சாட்டுகளை மறுத்திருக்கிறார். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளிலும் இவர் தனது பக்கக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். கோப்பாய் பொலீஸார் தனியாக விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

விசாரணைக் குழுவுக்குப் பேரவையினால் நியமிக்கப் பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் மே மாதம் 08 திகதியிடப்பட்டு 10 ஆம் திகதி உரியவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

காலந் தாழ்த்திக் கடிதம் அனுப்பப்பட்ட காரணத்தால், தன்னால் விசாரணைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும், மே 12 ஆம் திகதி தான் ஐக்கிய இராச்சியத்துக்குப் பயணப்பட இருப்பதனால் விசாரணைக் குழுவில் இருந்து தன்னை விடுவிக்குமாறும் அந்த அதிகாரி பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தார். அதே நேரம் விசாரணைக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டவர் வேறு காரணங்களினால் விசாரணைக் குழுவில் இருந்து விலகுவதாக அறிவித்து விலகிக் கொண்டார் இதனையடுத்து கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் தலைமையில், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் ஒருவரையும், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் பிரதம கணக்காளரையும் உறுப்பினர்களாகக் கொண்ட விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்துடன் நேரடியாகச் சம்பந்தப்படாத இருவர் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொள்வதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் பராமரிப்புப் பகுதியின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணை வறிதானதாகக் கருதப்படுகிறது.

மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள பூர்வாங்க விசாரணைகளின் போதும், அதன் அடிப்படையில் தொடரப்படவுள்ள முறையான விசாரணைகளின் முடிவில் இன்னும் பல திடுக்கிடும் உண்மைகள் வெளிவரலாம் என்பதோடு இக் கையாடலுடன் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரிகள் சிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கொழும்பில் கனேடிய தூதரகத்துக்கு முன்னால் கடும்போக்கு சிங்கள அமைப்புகள் போராட்டம்.!



முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவு நாளை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையை கனேடிய பிரதமர் ஜெஸ்ரின் ட்ரூடோ மீளப்பெற வேண்டுமென வலியுறுத்தி கொழும்பில் போராட்டத்துக்கு அப்பால்பட்ட தேசிய அமைப்பினால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பௌத்த பிக்குகளை தலைமையாக கொண்ட இந்த அமைப்பு, கொழும்பில் உள்ள கனடா உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தது. இலங்கையில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழினப் படுகொலையை நினைவு கூரும் வகையில் கனேடிய பிரதமர் ஜெஸ்ரின் ட்ரூடோ கடந்த 18 ஆம் திகதி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் பல எதிர்ப்புக்கள் எழுந்திருந்த பின்னணியில், தற்போது போராட்டத்துக்கு அப்பால்பட்ட தேசிய அமைப்பு அவரது அறிக்கையை எதிர்க்கும் வகையில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தது.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டது மனிதாபிமான நடவடிக்கை எனவும் இனப்படுகொலை இல்லையெனவும், ஜெஸ்ரின் பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்த கூடாதெனவும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கனேடிய பிரதமரின் அறிக்கைக்கு சிறிலங்கா அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென போராட்டத்துக்கு அப்பால்பட்ட தேசிய அமைப்பு தலைவர் பலாங்கொட கஸ்யப்ப பிக்கு வலியுறுத்தியுள்ளார்.

# சீன நிறுவனத்துடன் இலங்கை முக்கிய ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வது தொடர்பில் சீனாவின் சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வு நேற்றைய தினம் (22.05.2023) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, இலங்கையில் பெட்ரோலியப் பொருட்களின் இறக்குமதி, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான இந்த நீண்ட கால ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சினோபெக் ஃப்யூயல் ஒயில் லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் சீனா, சிங்கப்பூரில் உள்ள அதன் தாய் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு பாப்பரசரின் பிரதிநிதி விஜயம்





பாப்பரசரின் இலங்கைக்கான நேரடி பிரதிநிதி கத்தரினா (Rit. Rev.BRIAN UDAIGWE) ஆண்டகை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இவர் நேற்றைய தினம் தனது விஜயத் தின் போது திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது அவர் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தின் தொன்மையையும், வரலாற்றையும் கேட்டறிந்துக் கொண்டுள்ளார்.

